

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு, மண்ணச்சநல்லூர் பேரூராட்சியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூபாய் 20.43 கோடி மதிப்பீட்டில் பேரூராட்சிக்குட்பட்ட அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்கும் பணிக்காக அடிக்கல் நாட்டி திட்டப்பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் . பிரதீப் குமார். மண்ணச்சநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் . கதிரவன், ஒன்றிய குழுத் தலைவர் . ஸ்ரீதர் , கோட்டாட்சியர் சிவசுப்பிரமணியன், உதவி இயக்குனர் பேரூராட்சிகள் காளியப்பன், மத்திய மாவட்ட செயலாளர். வைரமணி, செந்தில்குமார், பேரூராட்சி மன்றத் தலைவர் சிவ சண்முகக் குமார் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.02.2024) நடைபெற்ற கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற நிதிக் நாதெல்லா அவர்களுக்கு வருகின்ற 23.02.2024 முதல் 01.03.2024 வரை பிலிப்பைன்ஸில் நடைபெறவுள்ள 2023ஆம் ஆண்டிற்கான 11–ஆவது ஆசிய வயதுப் பிரிவு சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்துகொள்ள செலவினத் தொகையாக ரூ.1,36,500/க்கான காசோலையினை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் வழங்கினார். இந்நிகழ்வில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உடனிருந்தார்.

### புதுக்கோட்டையில் 73 ஏழைப்பெண்களுக்கு

# ரூ.29.75 இலட்சம் மதிப்பிலான திருமண நிதியுதவி தலா 8 கிராம் தங்கம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்!

புதுக்கோட்டை, பிப். 18-

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், 73 ஏழைப்பெண்களுக்கு திருமண நிதியுதவி மற்றும் தலா 8 கிராம் தங்கத்தினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் 16.02.2024 அன்று வழங்கினார்.

பின்னர் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பெண்கள் வாழ்க்கை. முன்னேற்றம் அடைவதற்காக எண்ணற்றத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் ஏழை, எளிய பெண்களுக்காக பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், ஏழைப்பெண்களுக்கு திருமண நிதியுதவி மற்றும் 8 கிராம் தங்கம் வழங்கப்பட்டது.

அதன்படி சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதியுதவித்திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டம் மற்றும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமணம் திருமண நிதியுதவித் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் திருமண நிதியுதவி மற்றும் 8 கிராம் தங்கம் ஏழைப் பெண்களுக்கு வழங்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 2023-2024 ஆம் நிதியாண்டிற்கு கூடுதல் ஒதுக்கீடு செய்யப்பட்டு பட்டம் மற்றும் பட்டயம் படித்த 46 பெண்களின் திருமணத்திற்கு தலா ரூ.50,000/ வீதம் ரூ.23,00,000/ மற்றும் தலா 8 கிராம் தங்கம் வீதம் 368 கிராம் தங்கமும், ஏனைய 10ம் வகுப்பு வரை படித்த 27 பெண்களுக்கு ரூ.25,000/ வீதம் ரூ.6,75,000/ மற்றும் தலா 8 கிராம் தங்கம் வீதம் 216 கிராம் தங்கமும் என மொத்தம் 73 பெண்களுக்கு ரூ.29,75,000 நிதியுதவி தொகையும், 584 கிராம் தங்கமும் இன்றையதினம் வழங்கப்பட்டது.

எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பெண்களின் நலனிற்காக செயல்படுத்தப்படும் இதுபோன்ற மக்கள்நலத் திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பெற்று தங்களது பொருளாதாரத்தினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

முன்னதாக, சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக வளாகத்தில், தமிழ்நாடு மாநில ஊரக (ம) நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) சார்பில், புதிதாகக் கட்டப்பட்டுள்ள மதி சிறு தானிய உணவகத்தினை இன்றைய தினம் திறந்து வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சிகளில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா , கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா. ஐஸ்வர்யா, மாவட்ட சமூக நல அலுவலர் க.ந.கோகுலப்பிரியா, நகர்மன்றத் துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, உதவித் திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) ராஜாமுகமது, அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், தொழில் கூட்டுறவு அலுவலர் எஸ்.மனோகரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### மார்ச் 1 கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்!

# ஆதிதிராவிடர் நலக் குழு சார்பில் சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்! ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, பிப். 18-

சென்னை அண்ணா அறிவாலயத்தில் காலை 11.00 மணியளவில் திமுக ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம், ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துணைத் தலைவர், வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் முன்னிலை வகித்தார்.

மேலும் இக்கூட்டத்தில் மார்ச்1 கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடுதல்.

27.02.2024 அன்று கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ள மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தை சிறப்பாக நடத்துதல். 2024 நாடாளுமன்ற தேர்தல் பணியினை ஆதிதிராவிடர் நல்குழு நிர்வாகிகள் சிறப்பாக செயலாற்றுதல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதனைத் தொடர்ந்து இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தினை சிறப்பாக நடத்திட சென்னை காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் இணைச் செயலாளர்கள் வி.பி. ராஜன், திப்பம்பட்டி ஆறுசாமி, மருதூர் ராமலிங்கம், துணைச் செயலாளர்கள் மு.பொன்தோஸ், மாரியப்பன் கென்னடி, பி.துரைசாமி, சி.தசரதன், பாரமானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்.


தமிழ்நாடு அரசு

**தென்காசி நகராட்சி**

கலைஞர் 100 1924 - 2023

ந.க.எண். 572/2024/இ1 | ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு | நாள்: 05.02.2024

தென்காசி நகராட்சி ஆணையாளர் மூலம் தகுதி வாய்ந்த வகுப்பு இரண்டு மற்றும் அதற்கு மேல் உள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து மின்னணு ஒப்பந்தப்புள்ளி வாயிலாக **இரண்டு உறை** முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் **23.02.2024 மாலை 3.00 மணி** வரை வரவேற்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி படிவம் கிடைக்கும் விபரம் | ஒப்பந்தப்புள்ளி திறப்பு விபரம் | பணி செய்து முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 15வது நிதிக்குழுமம் (15th CFC Untied Grant) 2023-24 | | | | |
| 1 | 76.00 | 17.02.2024 | 23.02.2024 பிற்பகல் 3.30 மணி | 180 நாட்கள் |
| 2 | 75.50 | 17.02.2024 | 23.02.2024 பிற்பகல் 3.30 மணி | 180 நாட்கள் |
| 3 | 75.50 | 17.02.2024 | 23.02.2024 பிற்பகல் 3.30 மணி | 180 நாட்கள் |

ஒப்பந்தப்புள்ளி விபர அட்டவணை மற்றும் நிபந்தனைகள். **https://tntenders.gov.in** என்ற இணையதளத்தில் **17.02.2024** முதல் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிகள் தென்காசி, நகராட்சி ஆணையர் அவர்களால் **23.02.2024ம் தேதி பிற்பகல் 3.00 மணி** வரை மின்னனு முறை மற்றும் நேரடி ஒப்பந்த உறை முறைகளில் இரண்டு உறை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி தகுதி தமிழ்நாடு அரசின் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் மற்றும் அதை சார்ந்த விதிகளின்படி கூர்ந்தாய்வு செய்யப்படும். ஒப்பந்தப்புள்ளிகளுக்கான முன் வைப்புத்தொகை பணி மதிப்பீட்டில் 1 (ஒரு) சதவிகிதத்திற்கான வங்கி கேட்பு வரைவோலையாக ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். மின்னனு ஒப்பந்தத்திற்கு முன்வைப்புத் தொகையை வங்கி வரைவோலையாக தனி உறையில் வைத்து ஒப்பந்தப்புள்ளி பெட்டி மூடுவதற்கு முன்பாக ஒப்பந்தபுள்ளி பெட்டியில் சமர்ப்பிக்கவேண்டும். நகராட்சி ஆணையருக்கு எந்தவித ஒப்பந்தபுள்ளியையும் ஏற்கவோ மறுக்கவோ முழு அதிகாரம் உண்டு. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் விடுமுறையாக அறிவிக்கும்பட்சத்தில் மறு வேலை நாளில் அதே நேரம் ஒப்பந்தபுள்ளி திறக்கப்படும். இதர விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரி: **commr.tenkasi@tn.gov.in** தொலைபேசி எண்: 04633–222228

செ.ம.தொ இ./1032/ஒப்பந்தப்புள்ளி/2024

ஆணையாளர், தென்காசி நகராட்சி




புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், 73 ஏழைப்பெண்களுக்கு திருமண நிதியுதவி மற்றும் தலா 8 கிராம் தங்கத்தினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, வட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஐ.சா.மெர்சி ரம்யா, தலைமையில் 16.02.2024 அன்று வழங்கினார். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, மாவட்ட சமூகநல அலுவலர் செல்வி. க.ந.கோகுலப்பிரியா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# திருவாரூரில் - தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகம் அமைக்கப்படுமா?

## சட்டப் பேரவையில் பூண்டி கே.கலைவாணன் கேள்வி!

**சென்னை, பிப். 18-**

**பேரவையில் பூண்டி கே.கலைவாணன் எழுப்பிய கேள்விகளும், அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அளித்த பதில்களும் குறித்த விவாதம் வருமாறு:-**



**பூண்டி கே.கலைவாணன்:** திருவாரூரில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன்**, முதலமைச்சர் அவர்கள் திருவாரூரில் ரூபாய் ஒரு கோடி மதிப்பில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் ஒன்றை புதிதாக அமைப்பதற்கான அனுமதியைத் தந்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பூண்டி கே.கலைவாணன்:** மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் தலைவர் கலைவர் அவர்களால் 1997 ஆம் ஆண்டு நீதிக் கட்சி பிதாமகர்களில் ஒருவரான சர். ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்களின் பெயரில் திருவாரூர் மாவட்டம் தனி வருவாய் மாவட்டமாக அறிவிக்கப்பட்டு, சற்றேறக்குறைய 27 ஆண்டுகள் நிறைவுபெறும் நிலையில் அந்த மாவட்டத்திற்கு அகத் தூய்மை வாய்மைக்கு; புறத் தூய்மை வாழ்வுக்கு என்ற மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் தலைவர் கலைவர் அவர்களின் வைர வரிகளுக்கு வலுவூட்டும் விதமாக இந்தத் துறை சார்ந்த கட்டடத்தை அமைத்துக் கொடுக்க இசைவு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் நெகிழியை ஒழிக்கவேண்டும்; நெகிழியில்லாத மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு மஞ்சள் பை திட்டத்தை அறிமுகப் படுத்திய எங்கள் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை இந்தத் தருணத்தில் தெரிவித்து, புதிதாக அமைக்கப்பட உள்ள மாசு கட்டுப்பாடு அலுவலகம் என்பது முழு தேவைகளையும் பூர்த்தி செய்யும்விதமாக, ஏனெனில், கடல் அருகில் உள்ள மாவட்டம் என்பதால் காலநிலை மாற்றங்களால் அதிக பாதிப்புகள் ஏற்படும் மாவட்டம் என்பதை உணர்ந்து, அனைத்து தேவைகளும் அந்த அலுவலகத்தில் அமையும்படி செய்துதர வேண்டுமென்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன்:** முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பிறந்த மண்ணில், முதலமைச்சர் அவர்கள், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் அமைக்கின்ற பொழுது, அந்தப் பகுதியில் இருக்கின்ற காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை உடனுக்குடன் அறிந்து, அதற்கான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், அந்த மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலு வலகத்தில் அனைத்து வசதிகளுடன்கூடிய நவீன தொழில்நுட்பத்தோடு அந்த அலுவலகம் அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பூண்டி கே.கலைவாணன்:** இன்றைய சூழலில் மாசு கட்டுப்பாடு என்பதற்கு மரம் முக்கியத்துவம் வாய்ந்தது. மரத்தை நாம் வளர்த்தால், மரம் நம்மை வளர்க்கும் என்ற மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் வைர வரிகளைப் போற்றும்விதமாக, திருவாரூர் மாவட்டத்தில் பள்ளி கல்லூரிகளில் மரங்களைப் பெருமளவில் வளர்க்க வேண்டும். அதுமாத்திரமல்லாமல், திருவாரூர் மாவட்டத்தில் மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மத்திய பல்கலைக்கழகத்தில் மிகப்பெரிய அளவில் இடம் உள்ளது. அந்த இடத்தில் பொதுநல ஆர்வலர்களாலும், அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களாலும் அங்குள்ள காட்டுக்கருவை மரங்கள் அகற்றப்பட்டு, இப்பொழுது நல்ல நிலையில் உள்ள அந்தப் பகுதியில் பல்லாயிரக்கணக்கான மரங்களை நடுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்து, அந்தப் பகுதிகளில், மேலும் பள்ளி கல்லூரிகளில் மரங்களை வளர்ப்பதற்கு, மரங்களை நடவு செய்து மேம்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன்:** முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் கொண்டு வந்த, உலகத்தில் இருக்கின்ற அத்தனைபேரும் திருவாரூர் வந்து உயர்கல்வி படிக்கவேண்டும் என்ற அடிப்படையில் மத்தியப் பல்கலைக்கழகத்தை திருவாரூரில் அமைத்தார்கள். அந்த அடிப்படையில், கொரோனா பெருந்தொற்று காலத்தில் அந்தப் பல்கலைக்கழகத்தை நேரடியாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களோடு ஆய்வு மேற்கொண்டு, அந்தப் பகுதியில் இருக்கின்ற கருவேல மரங்களை அகற்றி, கிட்டத்தட்ட 75 இலட்ச ரூபாய் மதிப்பில் CSR நிதியின்மூலமாக மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு வருகிறது. அதேபோல, நமது பள்ளி, கல்லூரிகளில் மரங்களை நடவு செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். முதலமைச்சர் அவர்கள் பசுமைப் பள்ளி என்கின்ற மகத்தான திட்டத்தை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை மாணவப் பருவத்திலேயே உணர்கின்ற வகையில் ஒவ்வொரு பள்ளிக்கும் தலா ரூ.20 இலட்சம் மதிப்பில் அந்தப் பள்ளிக்குத் தேவையான மின்சாரத்தை solar மூலமாகப் பெறுவது, பள்ளி வளாகம் முழுவதும் மரங்களை நடவு செய்வது, அங்கே ஒரு மூலிகைத் தோட்டம், காய்கறித் தோட்டம் அமைப்பது, அதேபோல பிளாஸ்டிக் இல்லாத வளாகமாக மாற்றுவது, மழைநீர் சேகரிப்பு, கால்நடை மாற்றத்தால் ஏற்படக்கூடிய விழிப்புணர்வு இப்படி அத்தனை அமைப்புகளோடும், ஒரு முன்மாதிரித் திட்டத்தை 2022-23ல் 25 பள்ளிகளுக்கு ரூ.5 கோடி மதிப்பில் திட்டங்களை நிறைவேற்றி னோம்.

இந்த ஆண்டு ரூ.50 கோடி மதிப்பில், அந்தத் திட்டத்தை கிட்டத்தட்ட 100 பள்ளிகளில் நிறைவேற்ற இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, முதலமைச்சர் அவர்கள் பசுமைத் தமிழகம் திட்டம் என்கின்ற மகத்தான திட்டத்தை ஆண்டுக்கு 10 கோடி மரங்களை நடவு செய்கின்ற பணிகளை மேற்கொண்டிருக்கிற அந்த வகையில், வருகின்ற நிதியாண்டில் திருவாரூர் மாவட்டத்தில் இருக்கின்ற பள்ளி, கல்லூரிகளுக்கு மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற அனைத்து பள்ளி, கல்லூரிகளுக்கும் மரங்கள் நடவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



நீலகிரி மாவட்ட தி.மு.க. அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் பேசினார். உடன் சுற்றுலாத்துறை அமைச்சர் ராமச்சந்திரன், மாவட்ட அவைத் தலைவர் போஜன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிகுமார், தமிழ்ச்செல்வன், லட்சுமி, பொருளாளர் நாசர் அலி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் அரூரில் அனைத்து தொழிற்சங்கம் சார்பில் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் மறியல் போராட்டம் நடைபெற்றது. தொ.மு.ச. மாநில துணைத் தலைவர் ஜே.பழனி தலைமையில் பேரூர் கழக செயலாளர் முல்லைரவி மறியல் போராட்டத்தை தொடங்கி வைத்தார்.கூட்டத்தில் ஒன்றிய அரசைக் கண்டித்து கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன.போராட்டத்தில் ஈடுபட்ட தொ.மு.ச. மத்திய சங்க துணைத் தலைவர் ஏ.எஸ்.செல்வம், துணைப் பொதுச் செயலாளர் ஏ.செல்வம்,சிபிஎம் மாவட்டச் செயலாளர் ஏ.குமார், தொ.மு.சா.வினர் உள்ளிட்ட தோழமைக் கட்சி தொழிற்சங்கத்தினர் 250 க்கும் மேற்பட்டோரை போலீசார் கைது செய்து மாலையில் விடுவித்தனர்.